

தர்மபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி வடக்கு ஒன்றியம் கோணங்கின அள்ளி,சின்னபங்குநத்தத்தில் நடைபெற்ற ”உங்களைத் தேடி உங்கள் ஊராட்சியில் கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ.மணி எம்.பி. கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் கழகத்தினர் ஆற்ற வேண்டிய கழக ஆக்கப் பணிகள் குறித்து விளக்கி பேசினார். உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,தர்மபுரி தொகுதி பார்வையாளர் டி. செங்குட்டுவன்,நல்லம்பள்ளி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் பி.வைகுந்தம், நல்லம்பள்ளி மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் என்.பி.பெரியண்ணன் மற்றும் சித்தன், சின்னசாமி, முனுசாமி ரவி, யாஸ்மின், காந்தி, சக்திவேல் சாம்ராஜ், மாது, வெற்றிவேல் அரிச்சந்திரன், சிங்காரவேல், சதீஷ் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி இளைஞர் அணி சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் மாநில அளவிலான வில்வித்தை போட்டி மாவட்ட இளைஞர்அணி துணை அமைப்பாளர் வி.கே. முருகானந்தம் ஏற்பாட்டில் நடைபெற்றது. தொழில்துறைஅமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தாட்கோதலைவர் நா.இளையராஜா, ஒன்றிய செயலாளர்கள் சித்தேரிசிவா, கவியரசு, கே.வி. கே.ஆனந்த்,பாலஞானவேல் , இளைஞர்அணி வினோத்குமார் , மகளிரணி ராணிசேகர், ஷோபாகணேசன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

## இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம்!

# இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை கொஞ்சமும் பாதித்துவிடக் கூடாது!

### “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை,பிப்.13-

நீண்ட இழுபறிக்குப் பிறகு இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இதனால் இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை கொஞ்சமும் பாதித்துவிடக் கூடாது என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.



தலையங்கம்

தினத்தந்தி

11.2.2026 (புதன்கிழமை)

விவசாயிகளுக்கு பேரிடியான வர்த்தக ஒப்பந்தம்

அது வருமாறு:-

நீண்ட இழுபறிக்குப் பிறகு இந்தியா-அமெரிக்கா இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இதன்படி, இந்திய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட 25 சதவீத பரஸ்பர வரி 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால் விதிக்கப்பட்ட 25 சதவீத அபராத வரியும் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு அமெரிக்கா எச்சரிக்கை மணியும் அடித்துள்ளது. இந்தியா இனியும் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்கினால், மீண்டும் 25 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் மிரட்டியுள்ளது. இந்த இடைக்கால ஒப்பந்தத்தில் சில சாதகங்களும் இருக்கிறது. அதேசமயத்தில் பாதகங்களும் இருக்கின்றன. இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தபிறகு இந்தியாவில் இருந்து ரூ.4 லட்சம் கோடி மதிப்பிலான பொருட்கள் வரி இல்லாமல் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது.

அதேபோல அமெரிக்க பொருட்களும் வரியில்லாமல் இறக்குமதி செய்யப்பட உள்ளது. இதில் இந்தியாவுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்பு என்னவென்றால், இதுவரை எந்த நாட்டுக்கும் வேளாண் சந்தையை திறக்க அசைந்து கொடுக்காமல் இருந்த இந்தியா இப்போது முதல்முறையாக அமெரிக்காவுக்கு வேளாண் சந்தையை தாராளமாக திறந்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து வேளாண்பொருட்களை இறக்குமதி செய்தால் இந்தியாவில் அதிக செலவு செய்து விவசாயம் செய்யும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதாவது அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களோடு விற்பனையில் போட்டிப்போடமுடியாது. இதனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாய பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டது.

இந்திய விவசாய சந்தைக்குள் வெளிநாடுகளால் நுழையமுடியாமல் இருந்தது. ஆனால் இப்போது முதல்முறையாக கையெழுத்தாகும் நிலையில் உள்ள இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின்மூலம் இந்தியா, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யும் வேளாண்பொருட்களுக்கு வரி தளர்வு கொடுத்துள்ளதாக இந்திய விவசாயிகள் கொதித்து எழுந்துள்ளனர். இதற்காக நாளை (வியாழக்கிழமை) அவர்கள் போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 3 வேளாண் சட்டங்களை எதிர்த்து பலநாட்களாக டெல்லி எல்லையில் இரவும், பகலும் போராட்டம் நடத்திய பஞ்சாப் விவசாயிகள்தான் இதை எதிர்ப்பதில் மும்முரமாக இருக்கிறார்கள். இப்போதைய ஒப்பந்தத்தின்படி கால்நடைகள் மற்றும் கோழி தீவனங்களை தயாரிக்க முக்கிய பொருளாக விளங்கும் சோளம், சோயாபீன்ஸ், சிவப்பு சோளம் போன்ற பல தானியங்களும் ஆப்பிள், வால்நட், பாதாம் போன்றவற்றையும், பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் வரிகுறைப்புடன் இறக்குமதி செய்வது இந்திய விவசாயிகளுக்கு பெரும் இடியாக விழும் என்று கூறப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் இமாசலபிரதேச விவசாயிகள் ஆப்பிள் சாகுபடியை நம்பியே தங்கள் வாழ்வாதாரத்தை வகுக்கிறார்கள். இப்போதைய ஒப்பந்தத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை மதிப்பிட்டால் ஆப்பிள் விவசாயமே அதல பாதாளத்துக்கு சென்றுவிடும். இதனால் ஆப்பிள் போல தங்களின் கண்களும் சிவந்துவிட்டதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். இதுமட்டுமல்லாமல் இதுவரை அமெரிக்க வேளாண்பொருட்களுக்கு இந்தியாவில் 30 சதவீதம் முதல் 150 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்ட நிலை மாறி, இப்போது பூஜ்ஜிய வரியாகிவிட்டது. அமெரிக்க விவசாய பொருட்களின் விலை மிக குறைவாக சந்தைக்கு வரும் நிலையில், எங்கள் பொருட்களை அவர்களோடு போட்டியிடமுடியாமல் எங்குபோய் விற்பது? என்று விவசாயிகள் கேட்கிறார்கள். மொத்தத்தில் இந்த ஒப்பந்தம் இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை கொஞ்சமும் பாதித்துவிடக்கூடாது என்பதை முக்கிய அடிப்படையாக கொள்ளவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## “தமிழ்நாடு தலைகுனியாது”

# விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் பரப்புரை!

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

விழுப்புரம்,பிப்.13-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, இன்று (13.02.2026 - வெள்ளிக்கிழமை) வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி. ஆகியோர் விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

அதன் விபரம் வருமாறு:

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இன்று (13.02.26 வெள்ளிக்கிழமை) “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற பரப்புரை நிகழ்ச்சி விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறுகிறது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கழக விளை யாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், எம்.பி ஆகியோர் இதில் பங்கேற்கவிருக்கின்றனர். முதல் நிகழ்ச்சியாக விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டமும், பின்னர் கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல் நிகழ்ச்சியும், மாலையில் திருவண்ணா மலை சாலை, கலைஞர் திடலில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், செஞ்சி சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மஸ்தான் செய்து வருகின்றார்.

## சி.எம்.டி.ஏ. சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும்

# 10 முதல்வர் படைப்பகங்கள் பிப்.25-க்குள் பயன்பாட்டிற்கு வரும்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.13-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (11.2.2026) தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி, அசோக் நகர், 11வது அவென்யூவில் உள்ள முழுநேர நூலகம் மற்றும் அண்ணா நகர் கிழக்கு முழுநேர நூலகத்தை சிஎம்டிஏ சார்பில் “முதல்வர் படைப்பகங்களாக” மேம்படுத்தப்பட்டு வரும் முன்னேற்றப் பணிகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.



அதனைத் தொடர்ந்து, சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கூட்டரங்கில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முடிவுற்றப் பணிகளை திறப்பு விழா முன்னேற்பாடு குறித்தும், நடைபெற்றுவரும் பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவது குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும், அமைச்சர் வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, பெரம்பூரில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் முரசொலி மாறன் பூங்காவின் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :


சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 25 முதல்வர் படைப்பகங்கள் சென்னையில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 3 முதல்வர் படைப்பகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் அதிக அளவில் முதல்வர் படைப்பகங்களை பயன்படுத்தியும், பயனடைந்தும் வருகின்றனர். சென்னை, அசோக் நகரில் ரூபாய் 15 கோடி செலவில் 15,118 சதுர அடி கட்டடப் பரப்பளவில் பிரமாண்டமான முதல்வர் படைப்பகம் அமைக்கப்பட்டு, இம்மாதம் 25-ம் தேதிக்குள் திறக்கப்படும். அதேபோல் சென்னை, அண்ணாநகரிலும் ரூபாய் 18 கோடி செலவில் 25,784 சதுர அடி கட்டடப் பரப்பளவில் மிகவும் பிரமாண்டமான ஒரு முதல்வர் படைப்பகம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 25-ம் தேதிக்குள் 10 முதல்வர் படைப்பகங்கள் கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சிஎம்டிஏ உறுப்பினர்/முதன்மைச் செயலாளர் செயலர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, கூ. பி.ஜெயின், கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, தம்பிரான், சரவணன், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



கோவை மாநகர் மாவட்டம், கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் நடைபெற உள்ள “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற மாபெரும் பரப்புரை கூட்டத்தை முன்னிட்டு, காந்திபுரம் பகுதியில் அமைந்துள்ள ஜி.பி. கேலக்சி மஹாலில் தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கருத்துகேட்பு கலந்தாய்வு கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேர்தல் பணிக்குழு செயலாளர் கடலூர் புகழேந்தி சிறப்புரை யாற்றினார். இதில் கழகத் தீர்மான குழு செயலாளர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி, டாக்டர்.மகேந்திரன், மீனா ஜெயக்குமார், வி.ஜி.கோகுல், பகுதி கழக பொறுப்பாளர்கள் ஆ.கண்ணன், மார்க்கெட் எம்.மனோகரன், என்.ஜே.முருகேசன், வி.ஐ.பதுருதீன், ப.பசுபதி, ஆர்.எம். சேதுராமன், இலா.தேவசீலன், டெம்போ சிவா, விஜயகுமார், ப. சிவகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்த்தாய் வாழ்த்து!



“மகளிர் உரிமைத் தொகை”

“மகளிர் விடியல் பயணம்”

“புதுமைப்பெண் திட்டம்”

“தாயுமானவர் திட்டம்”

“நான் முதல்வன் திட்டம்”

“காலை உணவுத் திட்டம்”

இன்னும்

இன்னுமாக

எண்ணில்லா திட்டங்களால்

எளிய மக்களின் இன்னல் தீர்த்து

இந்தியாவின்

தலை சிறந்த மாநிலமாக

தமிழ்நாட்டை

தலைநிமிரச் செய்திருக்கும்

‘திராவிட மாடல்’ நாயகர்

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்

ஒய்வற்ற உழைப்புக்கு

ஒப்பற்ற தொண்டூழியத்திற்கு

தமிழ்நாட்டு மக்கள் செலுத்தும்

நன்றிக் காணிக்கையாக

பாராட்டுப் பதக்கமாக

இருக்கப் போகிறது

2026-சட்டமன்றத் தேர்தலில்

இருநூறு தொகுதிகளையும் கடந்து

திமுக ஈட்டவிருக்கும் இமாலய வெற்றி..

ஆம்

**“வேண்டும்**

**ஸ்டாலின்**

**மீண்டும்**

**ஸ்டாலின்”**

என்பதே

ஏப்ரல் மாதத்து

ஒட்டுப்பதிவு எந்திரங்களின்

தமிழ்த்தாய்

வாழ்த்தாக

இருக்கப்

போகிறது...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்